சார்பு நீதிமன்றம், ஓமலூர், சேலம் மாவட்டம்.
முன்னிலை.- திருமதி. T.மாலதி, பி.எஸ்.சி., பி.எல்.,
சார்பு நீதிபதி, ஓமலூர்.
2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 22-ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.4/2025
in
அசல் வழக்கு எண்.629/2018

1. இன்பநிலா
2. எழில்மணி
3. அமுதவல்லி . . . மனுதாரர்கள்/3,4,5 பிரதிவாதிகள்

// எதிராக //

O.E. சிவமகேந்திரன் .... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது என் முன்னர் 21.07.2025 ஆம் தேதி இறுதியான விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.கோடீஸ்வரன், B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. B. பாலமுருகன், B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும் இரு தரப்பு வாதுரைகள் கேட்டும், மனு சங்கதிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்ததுமான இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

## உத்தரவு

இம்மனுவானது மேற்படி வழக்கில் கூடுதல் பதிலுரையை ஏற்று அனுமதித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 8 விதி 9 -ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு ஆகும்.

### 1) மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு உறுதிக் கூற்றின் சுருக்கம்

மனுதாரர் மேற்படி வழக்கில் 5ம் பிரதிவாதி. எதிர்மனுதாரர்/வாதி ஏற்றதை ஆற்றுக மற்றும் நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு சொத்து சம்மந்தமாக மனுதாரர்கள் மற்றும்

எதிர்மனுதாரருக்குள் குடும்ப சிக்கல்கள் இருந்து வரும் சூழ்நிலையில் மேற்படி எதிர்மனுதாரர் மனுதாரர்கள் வெளியூரில் இருக்கும் சூழ்நிலையை சாதகமாக்கி கொண்டு வழக்கு சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் 2ம் பிரதிவாதி ராஜேஸ்வரி பதிலுரை தாக்கல் செய்துள்ள நிலையில் அவர் வழக்கு நிலுவையில் இருந்த பொழுது இறந்து விட்டபடியால் அவரது வாரிசுகளாக மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். இந்த மனுதாரர்கள் வெளியூரில் வசித்து வந்த காரணத்தால் அவர்களது வழக்கறிஞரை தொர்பு கொண்டு வழக்கு விவரங்கள் அறிந்து பதிலுரை தாக்கல் செய்ய இயலவில்லை. மேற்படி வழக்கில் சாட்சி விசாரணைக்கு வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் திடீரென 7ம் பிரதிவாதி வழக்கில் வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பதிலுரை தாக்கல் செய்துள்ளார். அந்த பதிலுரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை ஆட்சேபனை செய்து எங்கள் தரப்பில் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. மேற்படி 7ம் பிரதிவாதி வழக்கு சொத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்களுக்கு விரோதமாகவும், வாரிசுகளை மறைத்து உண்மை சம்பவங்களை மறைத்து தாக்கல் செய்துள்ள பதிலுரையை ஆட்சேபனை செய்து மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள கூடுதல் பதிலுரையை ஏற்று அனுமதித்து உத்தரவு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

## 2. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>

இம்மனு பொய்யானது. உண்மைக்கு புறம்பானது. சட்டத்திற்கும் நியாயத்திற்கும் எதிரானது. சட்டப்படி செல்லத்தக்கவையல்ல. இம்மனுவில் இந்த எதிர்மனுதாரர்கள் ஒப்புக் கொண்டுள்ள சங்கதியை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் பதிலுரையில் கண்டுள்ள சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர் பொய் என்று மறுக்கிறார். வழக்கில் 2ம் பிரதிவாதியின் வாரிசான இந்த மனுதாரர்களை வெகு காலத்திற்கு முன்பே வழக்கில் சேர்த்து அவர்களுக்கு பதிலுரை தாக்கல் செய்ய பலமுறை வாய்ப்பளித்து பின்னிட்டு வழக்கு சங்கதிகளை ஒப்புக்கொண்டு பதிலுரை தாக்கல் செய்து விட்டு தற்போது 7ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த பதிலுரையின் அடிப்படையில் புதிய சங்கதிகள் மற்றும்

பொருண்மைகள் அடங்கிய கூடுதல் பதிலுரையை தாக்கல் செய்திருப்பது ஏற்கத்தக்கதல்ல. மனுதாரர் வழக்கை வேண்டுமென்றே ஒருதலைபட்ச உத்தரவுக்கு விட்டு விட்டு மீண்டும் set aside மனு தாக்கல் செய்து மனு அனுமதித்த பின்னிட்டு மீண்டும் இம்மனுவை தாக்கல் செய்திருப்பது ஏற்கத்தக்கதல்ல. மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தக்கதல்ல. மனுவை ஏற்று கூடுதல் பதிலுரை ஏற்கப்பட்டால் இந்த எதிர்மனுதாரருக்கு பெரிய இழப்பு ஏற்படும். எனவே மனு தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. மனுதாரர்கள், எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம், ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4. இம் மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால்,

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?இல்லையா? என்பதேயாகும்.

5. <u>பிரச்சினைக்கான தீர்வு</u>

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் மனு மற்றும் எதிருரையின் சங்கதிகளையே வாதமாக வைக்கப்பட்டது.

6. இந்நீதிமன்றம் மனு, எதிருரை சங்கதிகளை பரிசீலனை செய்ததில்,மேற்படி அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுக மற்றும் நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு மேற்படி அசல் வழக்கானது விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில் இந்த இடைநிலை மனுவானது கூடுதல் பதிலுரையை ஏற்று அனுமதித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது கடந்த 2006 ஆம் வருடத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தும் கூட இன்னும் வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது. மனுதாரர் 7ம் பிரதிவாதி வாதிக்கு ஆதரவாக ஒரு பதிலுரை செய்திருப்பதால் அதனை மறுத்து கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யும் நிலைக்கு தாங்கள் உட்படுத்தப்பட்டதாகவும் எனவே இந்த

கூடுதல் பதிலுரையை தாக்கல் செய்திருப்பதாகவும் கூறியிருக்கின்றனர் என்பது தெரிய வருகிறது. வழக்கு கோப்பை பரிசீலித்த போதும், கடந்த 04.02.2025 ஆம் தேதியன்று 7ம் பிரதிவாதி கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய கட்டளை 8 விதி 9ன் கீழ் மனு தாக்கல் செய்து அம்மனு இறுதி விசாரணைக்கு பின்னர் 10.03.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேற்படி மனுவை அனுமதிக்க வாதி தரப்பில் ஆட்சேபனை எதுவும் இல்லை என மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது. 3 முதல் 5 பிரதிவாதிகள கடந்த 13.10.2023 ஆம் தேதியன்று பதிலுரை தாக்கல் செய்த பின்னிட்டு 7ம் பிரதிவாதி கூடுதல் பதிலுரையை தாக்கல் செய்திருப்பதால் அதற்கு மறுப்பு சொல்வதற்காக தங்கள் தரப்பில் கூடுதல் பதிலுரையை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதை பரிசீலிக்கும் பொழுது, மனுதாரர்களுக்கு அவர்களது கட்சியினை நிரூபணம் செய்வதற்காக உரிய பதிலுரையை தாக்கல் செய்ய வாய்ப்பு வழங்க வேண்டியது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

7. ஒரு வழக்கில் பிரதிவாதிக்கு முரண்பட்ட எதிர்வாதங்களை எடுக்க சட்டப்படி உரிமை உள்ள நிலையில், புதிய பொருண்மைகளை மனுதாரர்கள் தற்போது புகுத்தியுள்ளார்கள் என்ற எதிர்மனுதாரர் தரப்பு வாதம் ஏற்கும்படியாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இவ்வழக்கில் இன்னும் வழக்கு விசாரணை துவங்கப்படாததை கருத்தில் கொண்டும் மனுதாரரை குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தி உண்மை தன்மையை சோதனை செய்ய எதிர்மனுதாரர்களுக்கு வாய்ப்பு உள்ளதை கருத்தில் கொண்டும் நீதிமன்றம் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று முடிவு செய்கின்றது. மேலும் மனுதாரர்கள் /பிரதிவாதிகள் 7ம் பிரதிவாதி கூடுதல் பதிலுரை தாக்கல் செய்த பின்னிட்டு உடனே தங்களது கூடுதல் எதிர் வழக்குரையை தாக்கல் செய்துள்ள நிலையில் காலம் கடந்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்று கருத இயலாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகவே மனுதாரர் தாக்கல் செய்ய கோரியுள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கது என தீர்மானித்து இம்மனு பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக,

இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025-ம் ஆண்டு ஜூலை திங்கள் 22-ஆம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்./- T. மாலதி,
சார்பு நீதிபதி
ஓமலூர்

பிற்சேர்க்கை:
இரு தரப்பு சாட்சிகள்/சான்றாவணங்கள்: இல்லை.

ஒம்./- T. மாலதி,
சார்பு நீதிபதி
ஓமலூர்